# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 97/பேரூ/2026**
**நாள் : 24.04.2026**

ஆ. முருகேசன்,
சிதம்பரம்,
கடலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
குடவாசல் பேரூராட்சி,
திருவாரூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கடலூர் மாவட்டம், சிதம்பரம், எண். 59, பெரியார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஆ. முருகேசன் என்பவரது 28.12.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.12.2025 அன்று பெறப்பட்டு, 97/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், சிதம்பரம், .எண். 59, பெரியார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஆ. முருகேசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது 28.12.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

1. நான் திருவாரூர் மாவட்டம், குடவாசல் பேரூராட்சியினை தலைமையிடமாகக் கொண்டு 17.07.1997 முதல் 15.10.2003 வரை இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வந்தேன்.
2. பின்னர் நீலகிரி மாவட்டம், மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அலுவலகத்தினை தலைமையிடமாக கொண்டு 16.10.2003 முதல் 31.12.2004 வரை உதவி செயற் பொறியாளராகப் பணியாற்றி வந்தேன்.
3. அதன்பின்னர் தஞ்சை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களின் கட்டுப்பாட்டில் வரும் நாகை மாவட்டத்தின் சுனாமி புனரமைப்புத் திட்ட பேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளராக வேளாங்கன்னி மற்றும் தரங்கம்பாடி ஆகிய பேரூராட்சிகளின் சுனாமி திட்டப் பணிகளை கவனித்து வந்தேன்.

மேற்காணும் பணிக் காலங்களில், எனது பிரதி மாத ஊதியத்தில், கீழ்க்கண்ட மாதங்களில் பிடித்தம் செய்யப்பட்ட, பிற்காலச் சேமநலநிதி சந்தா தொகையினை, எனது பிற்காலச் சேமநலநிதி கணக்கு PFAC: GA 149670, என்ற எண்ணுள்ள கணக்கில்

செலுத்தப்படவில்லை என்றும், அதனை உரிய தலைப்பில் செலுத்துமாறு பலமுறை பதிவுத் தபால் மூலமாகவும் தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு கேட்டும் இன்றுவரை செலுத்தாமலும் எந்த ஒரு பதிலும் கிடைக்கப் பெறாமலும் உள்ளது.

இதுகுறித்து சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு 20.02.2025 நாளிட்ட கடிதத்தில், புகார்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

| வ.எண். | பிடித்தம் செய்த ஆண்டு | பிடித்தம் செய்த அலுவலகம் | பிடித்தம் செய்து, அனுப்பி வைக்கப்படாத மாதங்கள் | மொத்த மாதங்கள் |
|---|---|---|---|---|
| I | 1. 1999 | குடவாசல் பேரூராட்சி | செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் | 4 |
| | 1. 2000 | குடவாசல் பேரூராட்சி | ஜனவரி முதல் டிசம்பர் வரை அக்டோபர் நீங்கலாக | 11 |
| 2 | 2. 2003 | குடவாசல் பேரூராட்சி | ஜனவரி மற்றும் அக்டோபர் | 2 |
| | | | மொத்தம் | 17 மாதங்கள் |
| II | 2003 | நீலகிரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நீலகிரி | அக்டோபர், நவம்பர், டிசம்பர் | 3 |
| | 2004 | பிப்ரவரி | | 1 |
| | 2005 | டிசம்பர் | | 1 |
| | 2006 | ஜனவரி | | 1 |
| | 2007 | ஜூலை | | 1 |
| | | | மொத்தம் | 7 மாதங்கள் |
| III | 2007 | தஞ்சை மண்டல பேரூராட்சி 2 இயக்கம் | | 5 மாதங்கள் |

மேற்காணும் 29 மாதங்களுக்கான எனது பிற்காலச் சேமநலநிதி தொகையினை, எனது கணக்கில் உடன் செலுத்திட உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீட்டு மனுவை இம்முறைமன்ற நடுவத்தால் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தை சார்ந்த மனுதாரரும் மற்றும் தற்காலிக பணி நீக்கத்திலுள்ள திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் செயற் பொறியாளருமான திரு. ஆ. முருகேசன் என்பவர் தனது 28.12.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் தான் 1999ஆம் ஆண்டு

முதல் 2007ஆம் ஆண்டு வரை பணியாற்றிய காலங்களில் தனது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட 29 மாதங்களுக்கான சேமநலநிதி தொகையினை உரிய கணக்கில் செலுத்தப்படவில்லை என புகார் தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் உள்ள தனது முகவரியில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் செயற் பொறியாளர் என குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் மனுதாரர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு, ஒழுங்குமுறை நடவடிக்கையானது நிலுவையில் இருப்பதாக மனுதாரரின் மனு மூலம் அறிய முடிகிறது.

எனவே மனுதாரர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சட்டப்பூர்வ நடவடிக்கை நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர் தனது 28.11.2025 நாளிட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார் குறித்து மேற்காணும் விதியின்படி தகுதி வாய்ந்த அதிகாரி / அமைப்பினை அணுகி உரிய நிவாரணம் பெற்றுக் கொள்ளுமாறு மனுதாரரை அறிவுறுத்தலாம் என இம்முறை நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ஆ. முருகேசன்,
எண்.59, பெரியார் தெரு , சிதம்பரம், கடலூர் மாவட்டம் - 608 001.
2) செயல் அலுவலர்,
குடவாசல் பேரூராட்சி, திருவாரூர் மாவட்டம்.
3) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நீலகிரி மண்டலம், நீலகிரி.
4) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்.
5) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
6) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer),(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/~~உதிரிகள்~~.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/4/26
செயலாளர்
29/4/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032